(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 1(15).]**

# பாராளுமன்றத்தின்
# 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

**2025 மார்ச் 11, செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது**

## 2025 மார்ச் 20, வியாழக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

தொழில் அமைச்சர்,— தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் ஆண்டறிக்கை (2020),— 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் 2020 ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.08.24 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.09.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

தொழில் அமைச்சர்,— தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் ஆண்டறிக்கை (2021),— 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் 2021 ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.08.24 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.09.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

## 2025 ஏப்ரல் 22, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

430/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தேசிய மட்டத்திலான விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய மைதானம் ஒவ்வொன்றும் அமைந்துள்ள இடம் வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) திருகோணமலை மாவட்டத்திலுள்ள மக்கெய்சர் (MC Heyzer Stadium) விளையாட்டு மைதானத்தை தேசிய மட்டத்திலான விளையாட்டு மைதானமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, அதற்குத் தேவையான அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டதால் அந்த அகழ்வுப் பணி இடைநிறுத்தப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(iv) இடைநிறுத்தப்பட்டுள்ள அகழ்வுப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேற்குறிப்பிட்ட மக்கெய்சர் மைதானத்தை சர்வதேச கிரிக்கெட் மைதானமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

452/2025

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிங் கங்கை பெருக்கெடுப்பதன் காரணமாக காலி மாவட்ட மக்களின் வாழ்வியலுக்கும் உடமைகளுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) 2000 ஆம் ஆண்டின் பின்னர் கிங் கங்கையின் பெருக்கெடுப்பைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது வேறு நோக்கத்தைச் செயல்படுத்துவதற்கான உத்தேச கருத்திட்டங்கள் தொடர்பாக அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அறிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அறிக்கைகளைத் தயாரித்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்ட அறிக்கைகள் / சாத்தியவள ஆய்வறிக்கைகளைத் தயாரிப்பதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

(vi) அதற்கான நிதியைப் பெற்றுக்கொண்ட மூலங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிங் கங்கையின் பெருக்கெடுப்பைக் கட்டுப்படுத்துவதற்காக கருத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ் ஒவ்வொரு கருத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு, முடிவுற்ற ஆண்டு, ஒதுக்கப்பட்ட தொகை, செலவிட்ட தொகை, செயற்படுத்திய நிறுவனம் மற்றும் பெறப்பட்ட தீர்வுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

455/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரைகம்புர கைத்தொழிற் பேட்டையில் கைத்தொழிலாளர்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இன்றளவில் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது என்பதையும்;

(iii) வழங்கப்பட்டுள்ள காணிகளில் தற்போது பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு மற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படாத காணிகளின் அளவு வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) இதுவரை பணிகள் ஆரம்பிக்கப்படாமல் உள்ள காணிகளில் பணிகள் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) இதுவரை பணிகள் ஆரம்பிக்கப்படாமல் உள்ள காணிகளைப் பெற்றுள்ள முதலீட்டாளர்கள் முதலீடு செய்துள்ள நிதித்தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கைத்தொழிற் பேட்டையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிர்வாகக் கட்டிடத்தின் தற்போதைய நிலை யாது என்பதையும்;

(ii) அந்தக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் செலவு செய்துள்ள தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

500/2025

கௌரவ அநுராத ஜயரத்ன,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களில் சட்டத் தொழிற்துறையில் ஈடுபடும் புதிய சட்டத்தரணிகளுக்கான அலுவலகங்கள் இல்லாமையை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், தற்போது கண்டி மாவட்டத்தில் அலுவலகங்களைக் கொண்டிராத சட்டத்தரணிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நீதிமன்றம் வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) கண்டி, கெட்டம்பே பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சட்டத்தரணிகள் கட்டடத்தொகுதிக்கு அயலிலுள்ள காணியில் புதிய சட்டத்தரணிகளுக்கான அலுவலகமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) தற்போது மேற்படி நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி புதிய சட்டத்தரணிகளுக்கான அலுவலக நிர்மாணப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

516/2025

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய சனாதிபதியின் நியமனத்தை அடுத்து ஏழு குற்றச் செயல்கள் தொடர்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டதை கௌரவ சனாதிபதி அறிவித்தார் என்பதை அவர் அறிவாரா;

(ii) 2011 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பிரதேசத்தில் காணாமலாக்கப்பட்ட 'லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகாநந்தன்' ஆகிய இரண்டு அரசியல் செயற்பாட்டாளர்களின் காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகளின் இன்றளவிலான முன்னேற்றம் யாது;

(iii) இலங்கையில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இடம்பெற்ற உள்நாட்டு மோதல் நிலை முடிவடைந்த பின்னர் இடம்பெற்ற ஆயினும் இற்றைவரையில் தீர்க்கப்படாத ஏதேனுமொரு காணாமலாக்கப்பட்ட சம்பவம் பற்றிய விசாரணைகள் இன்றளவில் நிறைவடைந்துள்ளதா;

(iv) மேற்படி காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் பற்றிய விசாரணைகள் தாமதமாக்கப்பட்டமைக்கு அரசியல் தலையீடுகள் காரணமாக அமைந்துள்ளனவா;

(v) ஆமெனின், அது பற்றி மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

519/2025

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.12.31 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியத்திற்கும் 2015.12.31 ஆம் திகதிக்கு பின்னர் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியத்திற்கும் இடையில் பாரிய முரண்பாடு காணப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி ஓய்வூதிய முரண்பாட்டை நீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) இன்றளவில் பணியாற்றுகின்ற அரசாங்க ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூ.17,800/= ஆகவும், ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூ. 9,025/= ஆகவும் காணப்படுவதால் இவற்றுக்கிடையில் ரூ.8,775/= முரண்பாடு காணப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி முரண்பாட்டை நீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

542/2025

கௌரவ ஹர்ஷன ராஜகருணா,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புதிய கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாளொன்றில் கிடைக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) புதிய கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்காக இன்றளவில் கிடைத்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) நாளொன்றில் வழங்கப்படுகின்ற புதிய கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் புதிய கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் தற்போதுள்ள கடவுச்சீட்டு ஒன்றின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கும் விண்ணப்பித்த பின்னர், அதற்காக நீண்ட காலம் எடுக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

573/2025

கௌரவ அதுல வெலதகொட,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யால தேசிய வனப்பூங்காவின் ஊழியர் பற்றாக்குறை, ஊழியர் வீடுகள், சுற்றுலா பங்களாக்கள், கழிவறை வசதிகள், வீதிக் கட்டமைப்பு மற்றும் பொது வசதிகள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வனப்பூங்காவிற்குள் நுழைவதற்கு அனுமதியுள்ள பதிவு செய்யப்பட்ட சுற்றுலா ஜீப் வண்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பதிவு செய்யப்பட்டபோதிலும் இன்றளவில் சுற்றுலா வசதிகள் வழங்கப்படாத ஜீப் வண்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அந்த ஜீப் வண்டிகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) அந்த ஜீப் வண்டிகளுக்கு பதிலாக மாற்றீடு ஜீப் வண்டிகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(vi) அதிக சுற்றுலா ஈர்ப்பையும் கவனத்தையும் வென்றுள்ள, இலங்கைக்கு தினசரி அதிக வருமானத்தை ஈட்டித் தரும் யால தேசிய வனப்பூங்காவிலுள்ள வனவிலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் கட்டமைப்பை பாதுகாப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமாக மேற்கொள்ளப்படும் குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

575/2025

கௌரவ சானக மாதுகொட,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உப அஞ்சல் அலுவலகமொன்றை நடாத்திச் செல்வதற்கு உப அஞ்சல் அதிபர்களுக்கு இன்றளவில் செலுத்தப்படுகின்ற அலுவலக வாடகைக் கொடுப்பனவுத் தொகை போதுமானதாக காணப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி வாடகைக் கொடுப்பனவை அதிகரிப்பதிலுள்ள தடைகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(iv) அவற்றை தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) அதற்காக எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

580/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அப்போதைய போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் கீழ் இலங்கைப் புகையிரத திணைக்களத்தினால் குருணாகல் - தம்புள்ளை ஊடாக ஹபரன வரையில் புகையிரதப் பாதையொன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு அதற்குரியதான அடிப்படைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(ii) அதற்கென கலேவெல மற்றும் தம்புள்ளை பிரதேச செயலகப் பிரிவுகளின் மக்களினதும், ரங்கிரி தம்புள்ளை ரஜமஹா விகாரையின் மற்றும் பம்பாவ ரஜமஹா விகாரையின் காணிகள் மற்றும் சொத்துக்களின் இருப்பாட்சி/ உடைமை உரிய பிரதேச செயலாளர்களினால் சட்டரீதியாக கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) பிரதேச செயலாளர்களினால் இருப்பாட்சி பொறுப்பேற்கப்பட்ட மேற்படி காணிகள் மற்றும் சொத்துக்களின் இருப்பாட்சியை முன்னுரித்தாளர்களுக்கு மீள ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சொத்துக்கள் கடந்த சுமார் 10 வருடங்களாக பராமரிக்கப்படாமையின் காரணமாக அவற்றுக்கு இடம்பெற்றுள்ள அழிவுகளுக்கான நட்டங்களுக்காகவும் காணிகள் அபிவிருத்தி செய்யப்படாமை காரணமாக வருமானங்களை இழந்தமைக்காகவும் நட்டஈட்டுத் தொகை/ கருணைக் கொடுப்பனவு வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பில் பின்பற்றப்படும் முறைமை யாது என்பதையும்;

(iv) மேற்படி நட்டஈடு/ கருணைக் கொடுப்பனவு வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

(v) இன்றேல், அவ்வாறான ஏதேனும் கொடுப்பனவு வழங்கப்படுவது இடம்பெறாதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஏப்ரல் 23, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

11/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகார சபை வசமுள்ள காணிகளை பாரிய கருத்திட்டங்களுக்கு வழங்கும் நடைமுறை யாதென்பதையும்;

(ii) வளவ வலயத்தில், சந்திரிகா குளப்பிரிவில் வாழைச் செய்கைக்காக 'டோல் லங்கா' கம்பெனிக்கும், 'விற்றா ஓகனி' கம்பெனிக்கும் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அக்காணிகள், உரிய நடைமுறைக்கு அமைவாக வழங்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

72/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் மட்/காயன்குடா கண்ணகி கல்லூரி மற்றும் கல்குடா கல்வி வலயத்தின் மட்/கோரகல்லிமடு ஸ்ரீ ரமண மஹரிஷி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் IC வகையைச் சேர்ந்த பாடசாலைகள் என்பதையும்;

(ii) மட்/காயன்குடி கண்ணகி கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் எல்லே விளையாட்டில் தேசிய மட்டத்தில் முதலிடத்தையும், மட்/கோரகல்லிமடு ஸ்ரீ ரமண மஹரிஷி வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவிகள் கபடி விளையாட்டில் தேசிய மட்டத்தில் முதலிடத்தையும் பெற்றுள்ளார்கள் என்பதையும்;

(iii) எனினும், மேற்படி பாடசாலைகளுக்கு இதுவரையில் உடற் பயிற்சி பயிற்றுவிப்பாளர்கள் நியமிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு உடற் பயிற்சி பயிற்றுவிப்பாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

94/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டுக்குள் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பயிர்களுக்கு வன விலங்குகளால் ஏற்படுத்தப்படும் சேதம் மதிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சேதம் நெல், காய்கறிகள் மற்றும் பழங்கள் ஆகிய ஒவ்வொரு பயிர் வகையினதும் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) உணவுப் பயிர்களுக்கு அதிகமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் வன விலங்குகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

213/2024

கௌரவ ரோஹண பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள அரச பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் தொழில்நுட்பவியல் பாடத்தை கற்பிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தொழில்நுட்பவியல் மிக முக்கியமான பாடம் என்பதால், அதனை ஏனைய பாடசாலைகளிலும் கற்பிப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

582/2025

கௌரவ லால் பிரேமநாத்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மத்திய அரசினால் மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) மத்திய அரசினால் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி செலவிடப்படும் முறை குறித்து பாராளுமன்றம் அறிந்துகொள்ளும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த தென் மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிதியிலிருந்து தென் மாகாண கலாசார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) தென் மாகாண கலாசார அமைச்சினால் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள கட்டிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அது தொடர்பாக விசாரணையொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) மேற்படி கட்டிடங்களை பொது மக்களின் தேவைகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

604/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— போக்குவரத்து, நெடுஞ்சாலைள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தின், மினுவாங்கொடை பன்சில்கொடை பிரதேசத்தில் அமைந்துள்ள 09 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 8000 பொதுமக்கள் நாளாந்தம் பயன்படுத்தும் பாலம் பழுதுபார்க்கப்படுவதற்காக 2021 ஆம் ஆண்டில் கழற்றி அகற்றப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) எனினும், நான்கு வருடங்கலாக மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படாமை மற்றும் அந்த வீதியினூடாக கம்பஹா வரையில் பயணித்த இரண்டு பேருந்துகளும் பயணிக்காமை காரணமாக மேற்படி பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு இலக்காகி உள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்திற்குப் பதிலாக புதிய பாலமொன்றை நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) குறித்த மொத்த தொகையும் உரிய கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்தக் கணக்கின் பெயர் மற்றும் கணக்கு பேணப்படும் வங்கி யாதென்பதையும்;

(iv) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை இரண்டரை மாதத்திற்குள் நிறைவு செய்யுமாறு குறித்த பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்குப் பொறுப்பாகவுள்ள அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு 2024.04.04 ஆம் திகதி நடைபெற்ற மினுவாங்கொட பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி பாலத்தைத் திறந்துவைக்க எடுக்கும் காலம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

611/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு, சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு 2024 ஆம் ஆண்டு முதல் இதுவரை அறுவைச் சிகிச்சைகளுக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக நன்கொடையாளர்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள பணத்தொகை யாது;

(ii) மேற்படி பணத்தொகையில் பயன்படுத்தப்பட்டுள்ள பணத்தொகை மற்றும் பயன்படுத்தப்படாதுள்ள பணத்தொகை வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி வைத்தியசாலைக்கு நன்கொடையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் பணத்தை உரிய முறையில் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

631/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல அரச பாடசாலைகளில் தரம் 1 முதல் தரம் 5 வரையிலும் தரம் 6 முதல் தரம் 11 வரையிலும் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) மேல் மாகாணத்தில் சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழி மூலமான அரச பாடசாலைகளில் தரம் 1 முதல் தரம் 5 வரையிலும் தரம் 6 முதல் தரம் 11 வரையிலும் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) கொழும்பு கல்வி வலயத்தில் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலமான அரச பாடசாலைகளில் தரம் 1 முதல் தரம் 5 வரையிலும் தரம் 6 முதல் தரம் 11 வரையிலும் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) குறித்த ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவைப்படும் காலம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

634/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இஸ்ரேல் நாட்டிற்கு கமத்தொழில் துறை சார்ந்த வேலைவாய்ப்புகளுக்காக புறப்பட்டுச் சென்ற இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) அவர்களை தெரிவு செய்கையில் பின்பற்றப்பட்ட செயன்முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வேலை வாய்ப்புகளை வழங்கும் நடவடிக்கையை வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

648/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் நிர்மாணப் பணிகள் தொடர்பான ஆரம்பத் திட்டம் தயாரிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அதற்கான புதிய வழிகாட்டல் திட்டம் தயாரிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி புதிய வழிகாட்டல் திட்டம் எதேச்சதிகாரமாக தயாரிக்கப்பட்டுள்ளதாக அதன் தொழிற்சங்கம் எடுத்துக் காட்டியுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதுதொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2025 ஏப்ரல் 24, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

157/2024

கௌரவ (சட்டத்தரணி) தயாசிறி ஜயசேக்கர,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக சேதமடைந்த மொத்த விளை நிலங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி விளை நிலங்களின் அளவு, நெற் காணிகள், சோளம் மற்றும் ஏனைய விளை நிலங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) விளை நிலங்களுக்கு ஏற்பட்ட சேதத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிசார் நட்டம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சேதமடைந்த விளை நிலங்களுக்காக செலுத்தப்பட்ட மொத்த நட்டயீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நட்டயீட்டுத் தொகை நெற் காணிகள், சோளம் மற்றும் ஏனைய பயிர்கள் என்ற அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இதுவரையிலும் நட்டயீட்டுத் தொகை செலுத்தப்படாத விளை நிலங்களின் அளவு யாதென்பதையும்;

(iv) அவற்றுக்கு நட்டயீடு செலுத்தாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

195/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கையில் சீனா மேற்கொண்டுள்ள முதலீட்டு கருத்திட்டங்களின் எண்ணிக்கை, அவ்வொவ்வொரு கருத்திட்டத்தினதும் பெயர், முதலீட்டின் பெறுமதி மற்றும் அதனூடாக தோற்றுவிக்கப்பட்ட நேரடி மற்றும் மறைமுகத் தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை என்பன ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இலங்கைக்கு அதிகளவிலான சீன முதலீடுகளை ஈர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

222/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இளம் தொழில்முயற்சியாளர்கள் பிணையற்ற கடனை பெற்றுக்கொள்ளும் பொருட்டு, “வளமான நாடு அழகான வாழ்க்கை” கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக நிறுவப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்ட அபிவிருத்தி வங்கி இற்றைவரை நிறுவப்படவில்லை என்பதையும்;

(ii) மேற்படி தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு தாமதிப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

278/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தமிழ் மொழிப் பாடசாலைகளில் சிங்கள மொழியும், சிங்கள மொழிப் பாடசாலைகளில் தமிழ் மொழியும் கற்பிக்கப்படுவதைக் கட்டாயமாக்க திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கின்ற காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) அதற்குத் தேவையான ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்;

(iv) இன்றேல், மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

310/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெல் சந்தைப்படுத்தல் சபை நிறுவப்பட்ட திகதியினையும்;

(ii) கடந்த 3 வருடங்களில் அச் சபையினால் ஒவ்வொரு மாவட்டத்திலும் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு மற்றும் மதிப்பு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) நெல் கொள்வனவுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவப்பட்டுள்ள நிலையங்களின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்;

(iv) ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நெல் களஞ்சியப்படுத்தல் சாலைகளின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்;

(v) ஒவ்வொரு மாவட்டத்திலும் அறுவடை செய்யப்பட்ட மொத்த நெல்லிலிருந்து அரசாங்கத்தினால் வருடாந்தம் கொள்வனவு செய்யப்படும் நெல்லின் சதவீதம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிறிய மற்றும் பாரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களுக்கு அரச வங்கிகளால் கடந்த 3 வருடங்களில் வழங்கப்பட்ட நிதியின் அளவினையும்;

(ii) மேற்கூறப்பட்ட ஆலை உரிமையாளர்களால் அக்காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவினையும்;

(iii) அவ் ஆலை உரிமையாளர்களின் பெயர்களையும் மேற்கூறப்பட்ட காலப்பகுதியில் அவர்கள் கொள்வனவு செய்த நெல்லின் அளவு மற்றும் பெறுமதியினையும்;

(iv) நெல்லை அரிசியாக மாற்றி அதனை மாவட்ட மட்டத்தில் விநியோகிப்பதற்கான முறைமையொன்று நிறுவப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

441/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த பத்து (10) வருட காலப் பகுதியில் நெல் சந்தைப்படுத்தல் சபையால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள நெல்லின் அளவு ஒவ்வோர் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) அக்காலப்பகுதியினுள் அச்சபைக்கு கிடைத்த இலாபம்/நட்டம் ஒவ்வோர் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) அக்காலப்பகுதியில் நெல் சந்தைப்படுத்தல் சபை, கட்டிடங்களைப் பழுதுபார்ப்பதற்காக செலவிட்டுள்ள தொகை யாது என்பதையும்;

(iv) கட்டிடங்களைப் பழுதுபார்ப்பதற்காக எதிர்காலத்தில் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

456/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருவார்களென எதிர்பார்க்கப்பட்டுள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருவார்களென எதிர்பார்க்கப்படுகின்ற நாடுகள் யாவை என்பதையும்;

(iii) அந்த சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான தங்குமிட/அறை வசதிகள் போதுமான அளவில் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iv) கொவிட் – 19 பெருந்தொற்று, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தன்னெழுச்சிப் போராட்டம் (அரகலய) போன்ற காரணங்களால் வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையின் சுற்றுலா ஹோட்டல் துறையின் வளர்ச்சிக்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிற்றுறையை கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) இலங்கையிலுள்ள சுற்றுலா வலயங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

585/2025

கௌரவ அஜித் கிஹான்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சீரற்ற சுற்றாடல் நிலைமைகள் காணப்பட்ட போதும் மரக்கறி மற்றும் பழ உற்பத்திகளை மேற்கொள்கின்றதொரு வலயமாக கற்பிட்டியை அடையாளப்படுத்த முடியும் என்பதையும்;

(ii) மழைக் காலங்களில் விவசாய நிலங்கள் நீரில் மூழ்கி பயிர் சேதம் ஏற்படுவதால் அப்பிரதேச மக்கள் பெருமளவில் சிரமங்களுக்கு ஆளாகின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மழை காரணமாக ஏற்படும் பயிர் சேதங்களுக்காக குறித்த விவசாயிகளுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) கற்பிட்டியில் மரக்கறி மற்றும் பழச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு உர மானியம் வழங்குவதற்கு வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

618/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறிய அளவிலான விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கென “சருசார” எனும் பெயரில் சலுகை வட்டி வீதத்தில் கடன் திட்டமொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திட்டத்தை அறிமுகம் செய்ததன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) இதுவரை மேற்படி கடன் திட்டத்திலிருந்து கடன் பெற்றுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கும்போது கவனத்தில் கொள்ளப்படும் அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(v) விவசாயிகளை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

703/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மிக வேகமாக மாற்றமடைந்துவரும் இந்த உலகில் காலத்தின் போக்குகளுக்கு இசைவானதாக கல்வி மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோல்களுக்கு அமைவாக கல்வி மறுசீரமைப்பானது எத்தனை வருடங்களுக்கொரு தடவை மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதையும்;

(iii) இலங்கைக்கு புதிய கல்வி மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஏப்ரல் 25, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

12/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நிறுவப்பட்டுள்ள விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவை நிறுவப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி விசேட பொருளாதார மத்திய நிலையங்களை நிறுவுவதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iv) அவற்றின் வர்த்தக மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப் படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

76/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாநகர சபைக்குரிய பிரதேசங்களிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டியுள்ள மற்றும் புதிதாக அமைக்கப்பட வேண்டிய வடிகாலமைப்புகள் காணப்படுகின்றன என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், ஏற்கனவே உள்ள வடிகாலமைப்புகளை புனரமைப்பதற்கும் புதிய வடிகாலமைப்புகளை அமைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

(iii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

95/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பிரதான துறைமுகங்கள் யாவையென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை மேற்படி ஒவ்வொரு துறைமுகத்தினதும் வருமானம் மற்றும் செலவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

214/2024

கௌரவ ரோஹண பண்டார,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் காணப்படும் சிறைச்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி சிறைச்சாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு சிறைச்சாலையிலும் இன்றளவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைக்கைதிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) சிறைச்சாலைகளில் நிலவும் அதிக நெரிசலைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

583/2025

கௌரவ லால் பிரேமநாத்,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் இலங்கையில் நடாத்தப்படும் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மாத்தறை மாவட்டத்தில் காணப்படும் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அக்குரஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படும் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அத்துரலிய பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படும் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி நிலையங்களுள் நிர்மாணப் பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள கட்டிடமொன்றை கொண்டுள்ள நிலையமொன்றைப் பற்றி அறிவாரா என்பதையும்;

(vi) அக்கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vii) அக்கட்டிடத்தை புனரமைத்து, அதனை இளைஞர் சமுதாயத்தின் பயன்பாட்டுக்கென வழங்குவதற்கு வகுத்துள்ள திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

605/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் பதிவு செய்யப்பட்டுள்ள முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் (முன்பள்ளிகள்) எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி முன்பள்ளிகளில் சேவையாற்றும் முன்பள்ளி நிர்வாகிகள் பூர்த்தி செய்ய வேண்டிய ஆகக் குறைந்த கல்வித் தகைமை யாதென்பதையும்;

(iii) இன்றளவில் சேவையில் ஈடுபட்டுள்ள முன்பள்ளி நிர்வாகிகளுள் மேற்படி ஆகக் குறைந்த கல்வித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள நிருவாகிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) சகல முன்பள்ளிகளுக்கும் ஒரே பாடத்திட்டம் அல்லது அவ்வாறான வழிகாட்டல் பொறிமுறையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முன்பள்ளி, ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை, பல்கலைக்கழகம் மற்றும் இதர கல்வி நிலைகளுள் முன்பள்ளிக் கல்வியே மிகவும் தீர்மானகரமானதும், முக்கியமானதுமாகும் என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், முன்பள்ளி கல்வியை நேரடியாக கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வந்து, அதனை மேலும் பயனுறுதிமிக்க வகையில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

612/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தை தாபித்ததன் நோக்கங்கள் யாவை;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி நிதியத்திற்கு அன்பளிப்பாக கிடைத்துள்ள தொகை யாது;

(iii) மேற்படி நிதியத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் யாவை;

(iv) மேற்படி நிதியத்திற்கு அன்பளிப்பாக கிடைத்துள்ள நிதி, மேற்படி நிதியத்தின் நோக்கங்களுக்கு புறம்பான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(v) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

632/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இஸ்ரேல் இனத்தவர்களின் சமய மற்றும் கலாசார நிலையங்கள் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை தாபிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) அவற்றுக்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

635/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் பராமரிப்புச் சேவைப் பதவிக்காக இஸ்ரேலுக்குச் சென்றுள்ள இலங்கைப் பணியாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களைத் தெரிவுசெய்கையில் பின்பற்றப்பட்ட வழிமுறை யாதென்பதையும்;

(iii) இவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி தொழில்வாய்ப்புகளை வெளிப்படைத்தன்மையுடன் வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

649/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அஸாத் மௌலானா என்ற நபர் சனல் - 4 அலைவரிசைக்கு அறிக்கையொன்றினை முன்வைத்த திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி அறிக்கை தொடர்பில் சமூகத்தில் பாரிய கருத்தாடல் உருவாகியதை அறிவாரா என்பதையும்;

(iii) அஸாத் மௌலானா என்பவரை இலங்கைக்கு அழைத்து வந்து, அது தொடர்பில் மேலதிக வாக்குமூலங்களைப் பதிவுசெய்து கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?